**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| | | | |
|---|---|---|---|
| 2024-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27-ம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பு 1 -ம் சாட்சியின் வாக்கு மூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி கிரேடு 3 பெஞ்ச்கிளார்க் திரு.சுவர்ணரத்தினக்குமார் என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | **குருசாமி** | தொழில் : | |
| த.பெ: | | சமயம் : | |
| கிராமம்: | | சாதி : | |
| வட்டம்: | | வயது: | |

**27.2.2024 OS No. 9/2023 வா.சா.1 குருசாமி ஆஜர்**

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 3-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. நான் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் அக்கா மகன் என் சொத்தை பட்டா மாற்றிவிட்டார். எனவே வழக்கை தாக்கல் செய்துள்ளேன். எத்தனை லக்க சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2 லக்க சொத்தாகும். இரண்டு சொத்திற்கும் சர்வே எண் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. இரண்டு சொத்துக்களுக்கும் விஸ்தீரணம் தெரியுமா என்றால் 27, 25 செண்ட் ஆகும். தாவா சொத்துக்கள் எப்படி எங்களுக்கு பாத்தியம் என்றால் பூர்விகசொத்தாகும். என் தாத்தா ராக்குத்தேவர் ஆவார். அவர் மகன் கருப்பையாத்தேவர் ஆவார். கருப்பையாதேவர் மகன் பழனியாண்டி ஆவார். என் அப்பா பழனியாண்டிக்கு இரண்டு தாரம் ஆகும். முதல் தாரத்திற்கு பிறந்தவர்கள் ராக்கம்மாள், பாப்பாத்தியம்மாள் ஆவார்கள். 2-ம் தாரத்திற்கு பிறந்தவர் நான் ஒருவர் மட்டும்தான்.

2. என் அப்பாவின் முதல்தாரத்தின் இரண்டு மக்களும், நானும் பாகம் பிரித்துக்கொண்டோம் என்றால் பிரித்துக்கொண்டோம். அவ்வாறு பாகம் பிரித்துக்கொண்டதற்கான ஆவணத்தை கைவசம் வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன். என் கைவசம் உள்ள பாகஆவணத்தை பார்த்தால் யார் யாருக்கு என்னென்ன சொத்து கிடைத்தது என்பது தெரியும் என்றால் சரிதான். முதல் தாரத்தின் இரண்டு மகள்களும் உயிருடன் உள்ளனரா என்றால் இல்லை இறந்துவிட்டனர். முதல் தாரத்தின் இரண்டு மகள்களுக்கும் வாரிசுகள் உள்ளார்களா என்றால் உள்ளார்கள். முதல் தாரத்தின் இரண்டு மகள்களின் வாரிசுகளை இவ்வழக்கில் சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. தாய் பங்கு என்பதால் இவ்வழக்கில் சேர்க்கவில்லை.

3. தாய் பங்கு என்பது என்னவென்றால் தாய்க்கு பங்கு கொடுத்துவிட்டோம். எனவே அவரது பிள்ளைகளை இவ்வழக்கில் சேர்க்கவில்லை. தாய்க்கு என்னென்ன பங்கு கொடுத்தோம் என்றால் 2 ஏக்கல் 60 சென்ட் இருந்த நிலத்தில் 1 ஏக்கர் 30 செண்ட் பாப்பாத்திக்கும், எனக்கு 1 ஏக்கர் 30 செண்டும் பிரித்துக்கொண்டோம். ராக்கம்மாளுக்கு பங்கு கொடுத்தோமா என்றால் அதை பாப்பம்மாள் தான் கொடுத்துக்கொள்வதாக கூறிவிட்டார். பாகம் பிரித்துக்கொண்டதற்கான எழுத்துபூர்வமான ஆவணம் என் கைவசம் வைத்துள்ளேன் என்றால் சரிதான். 3-ம் பிரதிவாதி சார்பதிவாளரை எதற்காக வழக்கில் சேர்த்தோம் என்றால் பட்டா முத்துவிஜயன் பெயரில் இருந்ததால் விற்றுவிடுவார் என்பதால் சேர்த்தோம். 3-ம் பிரதிவாதி சார்பதிவாளர் இவ்வழக்கிற்கு தேவையில்லாத நபர் என்றால் சரியல்ல.

4. சார்பதிவாளர் சட்டத்திற்கு உட்பட்டு ஆவணங்கள் சரியாக இருக்கும் பட்சத்தில் பதிவு செய்யக்கூடியவர் என்றால் சரிதான். நான் தேவையற்று 3-ம் பிரதிவாதி சார்பதிவாளரை இவ்வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சொத்து போய்விடும் என்பதால் சேர்த்தேன்.

**(1-ம் பிரதிவாதி தரப்பில் எந்த எடுத்துரைப்பும் இல்லாததால் 1-ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.)**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct

District Munsif Cum Judicial Magistrate, Thiruppuvanam.